பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 06 2026 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசின் சீர்திருத்தங்களும், தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களும் புதிய வாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தியுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

2. ஆயுஷ்மான் பாரத் திட்டம் மக்களின் மருத்துவச் செலவு சுமைகளைப் பெருமளவு குறைத்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. தென்மேற்கு பருவமழை நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

4. இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதலை ஈரான் தொடங்கியுள்ளது.

5. பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸெவ்ரெவ் பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மத்திய அரசின் சீர்திருத்தங்களும், தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களும் புதிய வாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தியுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் வங்கிகளுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

ஐரோப்பிய யூனியனுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவுக்கு பெரிய வாய்ப்புகளை வழங்கும் என்று அவர் கூறினார்.

இங்கிலாந்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் இரும்பு மற்றும் எஃகு ஏற்றுமதி அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் செயல்திறன் மிக்க நிர்வாகம், வலுவான பொருளாதார அடித்தளம், பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள நிலையான வளர்ச்சி ஆகியவற்றால் அதிக வாய்ப்புகளைக் கொண்ட நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் திட்டம் மக்களின் மருத்துவச் செலவு சுமைகளைப் பெருமளவு குறைத்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் புதுதில்லியில் இன்று கையெழுத்தாக உள்ளது.

இதுதொடர்பாக சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நீண்ட காலத்திற்குப் பிறகு நாட்டின் கடைசி மாநிலமாக மேற்குவங்கத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, இணையமைச்சர்கள் திரு. பிரதாப் ராவ் ஜாதவ், திருமதி அனுப்பிரியா பட்டேல், மேற்குவங்க முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை மருத்துவக் காப்பீடு வழங்கும் இத்திட்டத்தால், நாடு முழுவதும் நோயாளிகள் தங்களது சொந்தப் பணத்தை செலவழிக்கும் நிலை குறைந்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குவங்கத்திலும் இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்படுவதால் அம்மாநிலத்தில் தகுதியான பல லட்சம் பேர் பயனடைவார்கள் என்றும், அவர்களுக்கு சுகாதார செலவினங்களில் நிதி பாதுகாப்பு கிடைக்கும் என்றும் மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் இந்திய பகுதிக்கான வடக்கு மண்டல மாநாடு சண்டிகரில் இன்று தொடங்குகிறது.

இந்த இரண்டு நாள் மாநாட்டை மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தொடங்கி வைக்க உள்ளார்.

இதில் மாநிலங்களவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ், ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஜம்மு-கஷ்மீர், ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா மற்றும் தில்லி சட்டப்பேரவைத் தலைவர்களும், அதன் உறுப்பினர்களும் இதில் பங்கேற்க உள்ளனர்.

ராஜஸ்தான், சத்தீஸ்கட், உத்தரப்பிரதேசம், ஆந்திரா, மகாராஷ்டிரா, சிக்கிம், கோவா ஆகிய மாநிலங்களின்

சட்டப்பேரவைத் தலைவர்களும் இம்மாநாட்டில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

“வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் சட்டப்பேரவை உறுப்பினர்களின் பங்கு” என்ற தலைப்பில் இந்த இரண்டு நாள் மாநாட்டில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ஜம்மு-கஷ்மீர் பாதுகாப்பு சூழல் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா மற்றும் மூத்த அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர்.

அமர்நாத் யாத்திரை தொடர்பான ஏற்பாடுகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

யாத்திரைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், பல்வேறு அரசுத்துறை அமைப்புகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்புக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லி தேசிய வன உயிரியல் பூங்காவில் இணையதள அடிப்படையிலான டிக்கெட் முன்பதிவுக்கான செயலியை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

இந்த வன உயிரியல் பூங்கா தொடர்பான டிஜிட்டல் வழிகாட்டியையும் அவர் தொடங்கி வைத்தார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள செயலியின் மூலம் மக்கள் எளிதில் நுழைவுச் சீட்டுகளைப் பெற்று இந்தப் பூங்காவைப் பார்வையிட முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

வனவிலங்குகள் பாதுகாப்பில் இந்த உயிரியல் பூங்கா ஊழியர்களின் செயல்பாட்டுக்கு திரு. கீர்த்திவர்தன் சிங் பாராட்டு தெரிவித்தார்.

பறவைகள் கூடு மற்றும் சிங்கங்களின் வாழ்விடப் பகுதிக்கும் அவர் சென்று கோடைகால பராமரிப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

<<<<>>>>

போதைப்பொருள் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து ஜம்மு-கஷ்மீரை விடுவிக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.

பூஞ்ச் பகுதியில் நடைபெற்ற போதைப்பொருள் எதிர்ப்பு தொடர்பான கூட்டத்தில் பேசிய அவர், கஷ்மீரின் **20** மாவட்டங்களிலும் போதைப்பொருள் எதிர்ப்பு தொடர்பான நடைபயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

ஊராட்சி மற்றும் வார்டு நிலையில் இது தொடர்பான பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கவும், இப்பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காகவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. மனோஜ் சின்ஹா கூறினார்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் பட்டாசு ஆலைகள் தொடர்பான சட்டவிதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறியுள்ளார்.

மும்பையில் இது தொடர்பாக நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், வெடிபொருட்கள் உற்பத்தி நிறுவனங்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும், விபத்துகளைத் தடுக்கவும் இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக கூறினார்.

கடந்த சில வாரங்களில் நாக்பூர் மாவட்டத்தின் பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட வெடிவிபத்துகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி கட்சிகள் பங்கேற்கும் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற உள்ளது.

இதில் 23 கட்சிகள் பங்கேற்பதை உறுதி செய்துள்ளதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என்று திமுக ஏற்கனவே அறிவித்துள்ளது.

இதனிடையே புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு. ஷெசாத் பூனவாலா, இந்தக் கூட்டணிக்கு மக்கள் நலனில் அக்கறை இல்லை என்று குற்றம் சாட்டினார்.

கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என்று திமுக வெளிப்படையாக அறிவித்துள்ள நிலையில், பல்வேறு மாநிலங்களில் காங்கிரசுக்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் இடையே ஒற்றுமை இல்லாத சூழல் நிலவுவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் முந்தைய திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அனைத்து துறைகளிலும் முறைகேடுகள் நிலவியதாக அம்மாநில முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடந்த 15 ஆண்டுகளில் மாநிலத்தில் நிர்வாக சீர்கேடுகள் அதிகரித்து காணப்பட்டதாக தெரிவித்தார்.

மகளிருக்கு உதவித்தொகை வழங்கும் Lakshmir Bhandar திட்டத்தில் 27 லட்சம் போலி பயனாளிகள் இருந்ததாக அவர் கூறினார்.

இத்திட்டத்திற்கு மாற்றாக தற்போது அன்னபூர்னா திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் பிஜேபி அரசு நிறைவேற்றும் என்று திரு. சுவேந்து அதிகாரி உறுதியளித்தார்.

<<<<>>>>

இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதலை ஈரான் தொடங்கியுள்ளது.

ஏப்ரல் 8ஆம் தேதிக்குப் பின்னர் ஈரான் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் தாக்குதலை நிறுத்திவிட்டு அமைதிப் பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

அமைதி ஒப்பந்தம் ஏற்படும் வரை ஈரான் மீது எந்த தளர்வு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்ய ஈரான் ஆர்வம் காட்டவில்லை என்றும், ஒப்பந்தம் முடிவான பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈரானுடன் ஒப்பந்தம் ஏற்பட்டால் அந்நாட்டின் அணுசக்தி நடவடிக்கைகளை முடக்கும் பணியை அமெரிக்கா நேரடியாக மேற்பார்வையிடும் என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறினார்.

<<<<>>>>

தென்மேற்கு பருவமழை நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மணிப்பூர், நாகாலாந்து, மிசோரம், திரிபுரா, அசாம், அருணாச்சலப்பிரமேசம் ஆகிய மாநிலங்களில் பருவமழை நேற்று தொடங்கியதாக அந்த மையம் கூறியுள்ளது.

அடுத்த சில நாட்களில் இது மேலும் தீவிரமடையும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே கடலோர கர்நாடகா, கேரளா, மேற்குவங்கம், சிக்கிம் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், லடாக் மற்றும் உத்தராகண்டில் அடுத்த 4 முதல் 5 நாட்களுக்கு பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தலைநகர் தில்லியில் நேற்று பகலில் கடும் வெப்பம் நிலவிய சூழலில் நேற்று மாலை மிதமான மழை பெய்தது.

இதனால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸெவ்ரெவ் பட்டம் வென்றார்.

இறுதியாட்டத்தில் அவர் இத்தாலியின் **Flavio Cobolli**-யை **6-1, 4-6, 6-4, 6-7, 6-1** என்ற செட் கணக்கில் வென்றார்.

இதன் மூலம் **1937**ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்பட்டத்தை வெல்லும் ஜெர்மனியை சேர்ந்த வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

**<<<<The End>>>>**